https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# நம்மாழ்வாரின் சிறப்பும் பக்தியும்

**முனைவர் த. தட்சணா மூர்த்தி**
செயிண்ட் ஸ்டீபன் கல்லூரி
தில்லி

வைணவக் கொள்கையின் வழிபடு கடவுள் திருமால். தன்னிடத்தில் பக்தி கொண்ட உயிர்களுக்கு உற்ற இடரைப் போக்க உரிய நேரத்தில் வேண்டுவோர் வேண்டிய அவதாரம் எடுத்து அவர்களின் இடரைப் போக்ககி அருள்பவர். இவரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்ட அடியவர்கள் ஆழ்வார்கள். வைணவ சமயம் மிக ஆழங்கால் பட்ட சமயமாக உருப்பெற காரணமாகவும் அமைந்தவர்கள் இவர்களே. திருமாலின் திருக்குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டதனால் இவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கியவர்கள் பன்னிருவர். அவர்களில் முதன்மையானவர் நம்மாழ்வார் ஆவார். வைணவத்தில் உள்ள ஆழ்வார்கள் அனைவரும் நம்மாழ்வாரின் அங்கத்தில் இருப்பதனால் இவரை வழிபட்டாலே அனைவரையும் வழிபட்டதற்கு சமம் ஆகும். இக்கட்டுரை நம்மாழ்வாரின் இறை பக்தி குறித்து விளக்குவதாய் அமைகிறது.

## நம்மாழ்வார் பிறப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரியில் அவதரித்தவர் நம்மாழ்வார். இவரின் பெற்றோர்கள் காரியார், உடைய நங்கை. சடம் என்பது அவதரிக்கும் பொழுது ஆத்ம ஞானத்தை உணர்வதற்கு தடையாக இருந்த காற்றைக் கோபித்ததால் சடகோவர் என்ற சிறப்புப் பெயரை பெற்றார். இயற்கையான குழந்தை குணமின்றி மாறாக இருந்ததனால் இவருக்கு மாறன் என்ற பெயரும் உண்டு. பிறந்த பொழுது குழந்தைக்கு உள்ள இயற்கைக் குணத்திற்கு மாறாக இருந்ததனால் மாறன் என்ற பெயரும் உண்டு. மேலும், இவருக்கு பராங்குசன், திருவாய்மொழிப் பெருமாள், உதயபாஸ்கர், திருநாவீறுடைய பிரான், குருகைப்பிரான், திருக்குருகூர் நம்பி, தென்னரங்கன் பொன்னடி, வகுளாபரணன், அருள்மாறன் போன்ற திருநாமங்கள் உள்ளன. நம்மாழ்வார் ஒரு புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனம் இன்றி 16 ஆண்டுகள் தவம் இருந்தார். வேதங்களின் உண்மைப் பொருளை தமிழில் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என நான்கு நூல்களில் இயற்றி அருளினார்.

நம்மாழ்வாரின் சிறப்பு

பன்னிரு ஆழ்வார்களில் தனிச்சிறப்பு உடையவர் நம்மாழ்வார். மதுரகவி எனும் திருநாமம் உடைய ஆழ்வார் திருக் கோளூர் எனும் ஊரில் அவதரித்தார். நான் மறை மற்றும் தமிழ் நூல்களை ஓதி உணர்ந்தவர். அயோத்திமாநகரம் சென்று இறைவனை வணங்கி கங்கைக் கரையில் தங்கி இருந்தார். அவர் தென்திசையில் ஓர் ஒளியைக்கண்டார். அவ்வொளியைக் காண பல நாட்கள் நடந்து பயணம் செய்து திருக்குருகூர் வந்தடைந்தார். ஒளியைப் பின் தொடர்ந்து வந்த அவர் திருக்குருகூர் வந்தடைந்த உடன் அவ்வொளி மறைந்தது. பின்னர் அங்கிருந்த புளியமரத்தின் அடியில் பல ஆண்டுகளாக தவம் இருந்த நம்மாழ்வாரைக் கண்டார். அவரை சோதித்தறிய ஒரு கல்லை அவர் முன் எறிந்து சத்தத்தை உண்டாக்கினார். நம்மாழ்வார் கண்விழித்துப் பார்த்தார். நம்மாழ்வாரிடம்

**செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால்**

**எத்தை தின்று எங்கே கிடக்கும்?**

என்று வினவ. நம்மாழ்வார்

**அத்தை தின்று அங்கே கிடக்கும்**

**என்று பதிலளித்தார்.**

செத்தது என்பது உடல் சிறியது என்பது உயிர் பிரிதல் உயிர் தன் வினைகளுக்கு ஏற்ப உடம்பை அடைதல். மதுரகவியாழ்வார் கேட்ட கேள்வியின் பொருண்மை உயிர் உடம்பை அடைந்தால், எதனை அனுபவித்து எங்கே இருக்கும் என்பதாகும். அதற்கு நம்மாழ்வார் தந்த பதில், உடம்பை அடைந்த உயிர் தன் வினைப்பயனை அனுபவித்துக் கொண்டு அவ் உடம்பிலேயே இருக்கும் என்று விடையளித்தார். உயிர் அப்பிறப்பிற்குரிய வினை முடியும் வரை அவ்வுடம்பில் இருக்கும் என்பது இதன் பொருளாகும். சித்து எனும் உயிர் அசித்து எனும் உடம்பில் சென்று வினை முடியும் வரை தங்கும் என்பது வைணவத்தத்துவமாகும். அன்று தொட்டு நம்மாழ்வாரை தன் வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டவர் மதுரகவியாழ்வார். நம்மாழ்வாரை மட்டுமே இறைவனாகக் கொண்ட மதுரகவியாழ்வார் பார் போற்றும் பாக்களை தான் இறைவனாக ஏற்றுக் கொண்ட நம்மாழ்வார் மீது பாடியுள்ளார். ‘கண்ணிநுண்சிறுத்தாம்பு’ வைணவ சமயத்தில் நம்மாழ்வாரைப் போற்றி மதுரகவியாழ்வாரால் இயற்றப் பட்ட நூலாகும். மதுரகவியாழ்வாரால் நம்மாழ்வாரை வணங்கிப் பாடப்பட்ட இந்நூல் நாலாயிர திவ்யபிரபந்தம் தொகுப்பில் முதாலாயிரம் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. திருமாலுக்கு நம்மாழ்வாரின் பாடல் விருப்புற்றது போல. மதுரகவி ஆழ்வாரின் பாடல் நம்மாழ்வாருக்கு விருப்புற்றது ஆகும். காரணம், நாத முனிகள் ஒரு நாள் திருநாராயணபுரத்தைச் சேர்ந்த வைணவர்கள் சிலர் காட்டுமன்னார் திருமுன்பு ‘ஆராவமுதே’ எனும் திருவாய் மொழியைப் பாடக் கேட்டாராம். அதன் இறுதியில் ‘குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்’ என்று பாடியதனைக் கேட்டு திருவாய் மொழி ஆயிரம் பாசுரங்களைக் கொண்டது என்று உணர்ந்தாராம். இப்பாடல்களைத் தேடி நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூருக்குச் சென்றாராம். மதுரகவி ஆழ்வாரின் வழியினரான பராங்குசதாசர் என்பாரைச் சந்தித்து ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ எனும் நூலினைப் பெற்று நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த திருப்புளியமரத்தின் அடியில் முறையோடு பன்னீராயிரம் உருச்சொல்லி நிறைவு செய்தாராம், பின்பு நம்மாழ்வார் இவருக்கு ஞானக்கண் வழங்கிச் சமய நுண்பொருள்களையும், யோக நுட்பங்களையும் உணர்த்தி திவ்யபிரபந்தங்களையும் தந்தருளினார் என்பது குருபரம்பரை கூறும் வரலாறு ஆகும். ஆக, நம்மாழ்வார் திருமால் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராயும், இறைவனை அடைய முயற்சி செய்யும்

அடியவர்க்கு திருமாலைப் போன்று வேண்டிய நேரத்தில் ஆச்சாரியராய் வந்து வழி நடத்தவும் செய்துள்ளார்.

### நம்மாழ்வார் படைப்புகள்

நம்மாழ்வார் இயற்றிய பாசுரங்கள் நான்கு பகுதிகளாக உள்ளன. அவை, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிரு வந்தாதி, திருவாய்மொழி, இவை நான்கும் வேதங்களி சாரமாக உள்ளன என்பர்.

திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தத்தில் 100 பாசுரங்களும் திருவாசிரியத்தில் 7 பாசுரங்களும் பெரிய திருவந்தாதியில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங் களைப் பாடியுள்ளார். பெருமாளின் 108 திருப்பதிகளில் நம்மாழ் வார் தனியாக சென்று 16 கோயில் களையும், பிற ஆழ்வார்களுடன் சேர்ந்து 19 கோயில் களையும் என மொத்தம் 35 கோயில் களை மங்களாசாசனம் செய்துள்ளார்.

**ஆடிஆடி அகம் கரைந்து, இசை**
**பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி**
**நாடி நாடி நரசிங்கா! என்று**
**வாடி வாடும் இவ்வாள் நுதலே**

என்ற பாடல் வரிகளில் உடல் உயிர் அனைத்தும் திருமாலே அவனை ஆடிப்பாடி உருகி கண்ணீர் மல்கிப் பாடுவதே யான் பெற்ற பெரும்பேறு என்று குறிப்பிடுகிறார். இங்கு ஞான சம்பந்தர் பாடிய “காதலாகிக் கசிந்து” எனத்தொடங்கும் நினைவு கூறத்தக்கது. அடியவர்கள் வெவ்வேறு கடவுளை வழிபட்டாலும் பக்தி என்பது ஒன்றுதான் என்பது புரிகிறது. மேலும், நாயகி பாவத்தில் நயம்படப் பாடியுள்ளார். “தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்” அது உண்ணும் சோறு, பருகும் நீரு தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் அன்றோ? என்று பாடுகிறார். நம்மாழ்வாரின் இவ்வகை யான பக்தி சைவத்தில் உள்ள தொகை அடியார்களில் வரும் முப்போதும் திருமேனி தீண்டுவார்கள் போல, முப்போதும் திருமாலின் நினைப்பே என்பதை வெளிக்காட்டுகின்றன.

### திருவாய் மொழி

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரம் திருவாய்மொழி. இதில் 1102 பாசுரங்கள் உள்ளன. இவை அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. வைணவ ஆச்சாரியர்கள் பலர் இந்நூலு க்கு உரை எழுதினர். அவை வியாக்கி யானங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை மூவாயிரப்படி, ஒன்பதினாயிரப் படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பதாறாயிரப்படி என்று எழுத்துகளின் எண்ணிக்கையே திருவாய்மொழி வியாக்யானங்களுக்கு பெயராக அமைந்துள்ளன. வைணவர்கள் தம் வாழ்வின் அங்கத்தில் மறவாமல் பாராயணம் செய்யும் பாடல்களாகும். வைணவத்தின் தென்கலையாருக்கு திருவாய்மொழி மந்திரங்களை விட உயர்வானதாகும்.

நம்மாழ்வாரின் பாடல்களில் தத்துவம் மற்றும் ஞானப் பாடல்களும் உள்ளன. பழங்கால இலக்கியத் தொடர்கள் சில திருவாய்மொழியில் எடுத்தாளப்பட்டுள் ளன. நம்மாழ்வார் தம்மை நாயகியாக - காதலியாகக் கற்பனை செய்து கொண்டு நாரை முதலான பறவைகளைத் திருமாலி டம் தூது அனுப்புவதாகப் பாடும் பாடல்கள் நயம் மிக்கவை. உயிரினங்கள் சிறிதும் துயரின்றி வாழ ஒரே வழி இறைவனைத் தொழுவதே என்பதை,

***"தொழுமின் தூய மனத்தால் இறையும்***
***நில்லா துயரங்களே"***

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் இன்பம் என்பது பொதுவானது. அதனை அடைவதற்கு இறைவன் ஒருவனே பற்றுகோல். அவனைச் சரணாகதி அடைவதே துயரங்களைக் களைய ஒரே வழி என்பதை,

***"சேர்மின் உயிர்க்கு அதன் நேர் நிறை***
***இல்லே அற்றது பற்றெனின் உற்றது***
***வீடு "***

பெரிய திருவந்தாதி

பெரிய திருவந்தாதியில் 87 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களும் அந்தாதி அமைப்பைக் கொண்டவை ஆகும். தனக்குத் தாயாகவும், தந்தையாகவும், ஆச்சாரியராகவும் இருப்பவர் நீயே என்பதை விளக்கும் விதமாக,

"பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ

மற்றையா ராவாரும் நீபேசில்"

இவ்வாறு ஒவ்வொரு பாடல்களிலும் திருமாலின் மகிமைகளை பலவாறு எடுத்து விளக்குகிறார்.

திருவாசிரியம்

நம்மாழ்வார் பாடிய திருவாசிரியம் ஏழு பாடல்களைக் கொண்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், நான்காவது ஆயிரத்தில், 22வது பாடல் தொகுப்பாக இடம்பெற்றுள்ளது. நம்மாழ்வாரது இலட்சியம் 'திருவேங்கடமலையில் உள்ள என் அப்பன் எம்பெருமான் புகழ் பாடுவது அல்லாமல் வேறு ஒருவரைப் புகழத் தனது கவிதைத் திறத்தைப் பயன்படுத்த மாட்டேன்' என்பதாகும். உலகில் மனிதன் தன் இயல்புக்கு ஏற்ப வாழ்வதைவிட உலகியல் இயல்புக்கு ஏற்ப வாழ்வதே சிறந்தது. ஆன்ம சக்தி வீடுபேறு அடைவதற்கு உரிய செயலை உலகில் உள்ள உயிர்களில் மனிதன் மட்டுமே செய்ய முடியும் என்பதை உணரும் தருமமே உயர் நலமுடையவன் ஆகின்றான். நம்மாழ்வார் உயர்நலமுடையவனின் திருவடியை பற்றிக்கொள்ள சொல்லும் உபதேசம்

*"உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்*
*துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே"*

என்று நம்மாழ்வார் தன் மனத்திற்கு உபதேசம் செய்வது மனித குலத்திற்கு உபதேசம் செய்வதாக உள்ளது. தன்னை விட உயர்வு உடையவர் நலமுடையவர் என எவரும் இல்லை என்ற பெருமைக்கு உரியவர் யார்? அஞ்ஞானத்தை விலக்கி, தெளிந்த ஞானத்தை வழங்கியவர். எந்த நிலையிலும் குற்றமற்றவராகி நித்திய பிரகாசம் உடைய தேவர்களின் தலைவர். அத்தகைய சிறப்புமிக்க பரம்பொருளின் ஒளிமிக்க திருவடியைத் தொழுது இப் பிறவியாகிய துயரத்தை தீர்த்துக்கொள் என்று அறிவுறுத்துகிறார். வானம் என்பது வீட்டுலகம். வானோர்க்கு உயர்ந்த உலகம் தேவர்களும் அடைய இயலாத வீட்டுலகம். தத்துவஞானம் பெற்றவர் அடையும் வீடுபேறு என்பதை திருவாய் மொழி குறிப்பிடுகிறது. **"புலன் ஐந்துமே உம் பொறி ஐந்தும் நீங்கி, பலமுந்து சீரின் படிமின் ஓவாதே"** எனும் பாடலில் நலம் அந்தம் இல்லாதோர் வீடு என்ற ஒப்பற்ற அழிவில்லாத நாட்டினை அடையமுடியாது என்று குறிப்பிடுகிறார். உயிரற்ற பொருள் எல்லாவற்றிற்கும் மூலப்பகுதி காரணமாகும். பொருள் தோற்றத்திற்கு மூன்று காரணங்கள் உண்டு. மண்குடம் உண்டாக மண் வேண்டும் 1. காரணம் 2. அக்குடத்தை செய்பவன் 3. அக்குடம் செய்வதற்குரிய சக்கரம். அதுபோல இவ்வுலகத் தோற்றத் திற்கு இறைவன் மூன்று காரணங்களாக உள்ளான் என்பது வைணவ சமய கொள்கையாகும்.

"நினைந்த எல்லா பொருள்களுக்கும் வித்தாய்

முதலில் சிதையாமே

மனஞ்செய் ஞானத்து உன் பெருமை மாசுணாதோ

மாயனே!"

என்றும்

"தானோர் உருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முதலாய

வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்"

ஆகிய பாடல் வரிகள் உலகின் தோற்றத்

திற்கு முதற்காரணம் இறைவன் என்பதையும் சித்து அசித்துக்களை வெளிப்படுத்தி உலகை தோற்றுவித்தல் நிமித்த காரணம் என்பதையும் தெளிவுபடக் குறிப்பிடுகிறார்.

### திருவிருத்தம்

நூறுபாக்களைக் கொண்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், நான்காவது ஆயிரத்தில் 19வது தொகை நூலாக அமைந்துள்ளது. பழங்காலத்தில் வறுமையில் உழலும் புலவர்கள் செல்வரைப் பாடிப் பரிசில் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செல்வரைப் பொய்யாகப் பொருளுக்காகப் புகழ்ந்து பாடும் பொய்ம்மையை நம்மாழ்வார் வெறுத்தார். ஒரு பதிகம் முழுவதும் அவ்வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார். இறைவன் கொடுத்த அறிவால் இறைவனையே பாடவேண்டும் என்றும் திருமாலை வழிபட்டால் சிறப்புப் பெறலாம் என்று அறிவுறுத்திக் கூறுகிறார்.

### முடிவுரை

நம்மாழ்வார் வைவணவ மரபில் தனிச்சிறப்புடையவர். இவர் ஒருவரை வழிபடுவதன் மூலமே அனைத்து ஆழ்வார்களையும் வழிபட்ட பலன் உண்டு. இவர் சடகோபன், மாறன், பராங்குசன் போன்ற பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பெறுகிறார். மதுரகவியாழ்வார் இவரைச் சோதித்து வழிபடு கடவுளாக ஏற்றுக்கொண்டார். நம்மாழ்வார் எப்போதும் இறை சிந்தனையில் இருந்துள்ளார். இறைவனின் படைப்பினால் இவ்வுலகிற்கு நாம் வந்தோம் ஆகையால், அவரையே நாம் பாடித் துதிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறுகிறார். திருமாலை வழிபடுவதன் மூலம் பிறவிச்சுழலில் இருந்து விடை பெறலாம் என்கிறார். மக்கள் இவரின் பாடல்களைப் பாராயணம் செய்தால் இறைவனைக் கண்டுணரலாம்.

### துணை நூற்பட்டியல்


1. ஜெகத்ரட்சகன், எஸ்., *நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்*, சென்னை: ஆழ்வார்கள் ஆய்வு மையம்.
2. ஜெகத்ரட்சகன், எஸ்., *ஆழ்வார்களின் திருவரலாறு*, சென்னை: ஆழ்வார்கள் ஆய்வு மையம்.
3. சுப்புரெட்டியார், ந., *ஆழ்வார்களின் ஆராஅமுது*, சென்னை: வேங்கடம் வெளியீடுகள்.
4. ஞானசுந்தரம், தே., *வைணவ உரைவளம்*, சென்னை: தாய்மை பதிப்பகம்.
5. கோபாலசாரியர், ஸ்ரீ. காரப்பங்காடு., 1959, *நாலாயிர ப்ரபந்தம்*, சென்னை: திருமகள் விலாச அச்சகம்.